**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்**

**முன்னிலை: திரு. க. முனுசாமி, M.A., M.Sc., MBA., B.Ed., M.Phil.,**

**ந.க.எண்.1552/MS/மாஒ6/ஒபக/2022 நாள் : 30.11.2022**

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – மாதிரி பள்ளி – தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான கூட்டம் – மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துக் கொள்ள சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தல் - சார்பு.

பார்வை : சென்னை-6, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.4813/A11/MS/SS/2021-22/dated:22.11.2022.

*********

பார்வையில் காணும் சென்னை-6, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏதுவாக சிறப்பு திட்டமாக மாதிரிப் பள்ளிகள் உருவாக்கப்பட்டு அதனை செயல்படுத்தும் விதமாக வேலூர் மாவட்டத்தில் 2022 – 2023 ஆம் ஆண்டு உண்டு உறைவிட மாதிரி பள்ளி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்ட இணைப்பில் கண்டுள்ள மேல்நிலை முதலாம் ஆண்டு ஆங்கில மற்றும் தமிழ் வழி மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் 01.12.2022 வியாழன் அன்று காலை 10.30 மணிக்கு வேலூர், சத்துவாச்சாரி, ஹோலி கிராஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும். சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இத்தகவலை பெற்றோர்களுக்குத் தெரிவித்து மாணவர்களுடன் கூட்டத்தில் பங்கேற்க செய்தல் வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் சார்ந்த தலைமை ஆசிரியர்களே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

30/11/22

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

**இணைப்பு** :

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல். 30/11/2022

**பெறுநர்**

அனைத்து அரசு மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல்**:

1. சென்னை-6, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.